सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை




**16 மே, 2017**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில்

# ஆற்றிய உரை

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு -குறள்

**பொருள் வரும் வழிகளை உண்டாக்குவதிலும், வரும் பொருளைச் சேமித்தலிலும், பாதுகாத்தலிலும், தக்க வழியில் செலவிடுதலிலும் வல்லதே அரசு.**

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**வணக்கம்!**

**பு**துச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 14-வது சட்டப் பேரவையின் இரண்டாம் கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் நான் அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாண்பமை உறுப்பினர்கள் இந்த ஆட்சிப்பரப்பின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்குத் தங்களுடைய ஆதரவை தொடர்ந்து தருவார்கள் என உறுதியாக நம்புகிறேன். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், அவர்கள் மீது பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்கிற மக்களின் உயர்வுக்கும் கடுமையாகப்

பணியாற்றுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையுள்ளது. 2016-17ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்துவதில் நமது மாண்பமை முதலமைச்சர் காட்டும் ஈடுபாட்டை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

**2.** திடமான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்க அமல்படுத்தப்படுகிற சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைக் கொண்டுவருவதிலும், டிஜிட்டல் (பணமில்லா) பரிவர்த்தனையை மேம்படுத்துவதிலும் இவ்வாட்சிப்பரப்பு அதன் முழு ஒத்துழைப்பை அளித்துள்ளது என்பதை இந்த மேன்மைமிக்க அவையில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**3.** இந்த அரசானது சென்ற ஆண்டின் மொத்த ஒதுக்கீடான ₹ 6,550 கோடியில் 93.80 விழுக்காடான ₹ 6,144 கோடியை செலவு செய்துள்ளது. இந்தத் தொகையானது முந்தைய வருடத்தை ஒப்பிடும்போது மக்கள் நலத்திட்டங்களுக்காக அதிகப்படியான அளவில் செலவிடப்பட்டது என்பதை மாண்புமிக்க உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வள ஆதாரங்களில் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் குறைவு ஏற்பட்டதும், மத்திய ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தியது தொடர்பாக

இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் மானியத் தொகை கிடைக்காததும், செலவினக் குறைப்புக்கு முக்கிய காரணமாகும்.

**4.** மொத்த உள்நாட்டு உற்பத்தி GSDP (Gross State Domestic Product) என்பதே ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதற்கான முக்கிய காரணக்கூறு ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இவ்வாட்சிப்பரப்பின் 2016-17ஆம் ஆண்டுக்கான GSDPஆக ₹ 29,557.38 கோடி தொகை (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டுள்ளது; இது, கடந்த ஆண்டு தொகையாகிய ₹ 26,533.46 கோடியை (நடப்பு விலையை)விட 11.40 விழுக்காடு உயர்வானதாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2015-16ஆம் ஆண்டில் ₹ 1,72,143 (நடப்பு விலையில்)இருந்து 2016-17ஆம் ஆண்டில் ₹ 1,90,384 (நடப்பு விலை)க்கு உயர்ந்துள்ளது; இது 10.60 விழுக்காடு வளர்ச்சியை காட்டுகிறது.

**5.** பொதுக்கணக்குகளில் “வரவு-செலவு மதிப்பீடு, ஒதுக்கீடு மற்றும் கண்காணிப்பு முறை” (BEAMS) என்பதை சரியான தருணத்தில் புதுச்சேரி அரசு அறிமுகப்படுத்தியுள்ளது என்பதையும், இது இவ்வாட்சிப்பரப்பின் செலவினத்தை சீரமைக்க உதவுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான்

பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த நிருவாகம், டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களுக்குத் தேவைப்படும் உத்வேகம் அளிக்கும் வகையில், அதன் பணச் செலுத்தல்களை பெரும்பாலும் மின்னணு பரிமாற்ற முறையிலேயே செய்கிறது. இவ்வாட்சிப்பரப்பில் அண்மையில் நடத்தப்பட்ட டிஜிதன் மேளா (Digidhan Mela) பொதுமக்களிடையே மின்னணு பணப் பரிமாற்றத்தின் பயன்பாட்டினை பரிச்சயமாக்கியுள்ளது.

**6.** என்னுடைய முகப்புரையை முடிக்கையில் 2016-17ஆம் நிதி ஆண்டின்போது இந்த அரசால் துறைவாரியாக செய்யப்பட்ட முக்கிய சாதனைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விழைகிறேன்.

**வேளாண்மை**

**7.** நமது நாட்டின் ஏறக்குறைய 54 விழுக்காடு மக்களின் தலையாய வாழ்க்கைவள ஆதாரமாக விளங்குவது வேளாண்மை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த அரசு, உழவர்களை மையப்படுத்துகிற நோக்குடன் வேளாண்மை மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிப்பதை தொடர்ந்து செய்யும். இது, வேளாண்மை உற்பத்தியில், உற்பத்தித் திறனில் உழவர்கள் வருமானத்தில் நிலையான மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்.

2016-17ஆம் ஆண்டின்போது, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் விதைகள், சத்துமிக்க உரம், வேப்பம் புண்ணாக்கு, பயிர் பாதுகாப்பு வேதிப்பொருள்கள் முதலானவை போன்ற வேளாண் இடுபொருள்களை, ஏறத்தாழ 21,550 பொது மற்றும் அட்டவணை இன உழவர்களுக்கு மானிய விலையில் முறையே ₹ 167.82 இலட்சம் மதிப்பிலும், மற்றும் ₹ 72.38 இலட்சம் மதிப்பிலும் விநியோகிக்கப்பட்டன. நெல் சாகுபடியாளர்களுக்கு அதாவது 2,839 பொது உழவர்களுக்கும், 284 அட்டவணை இன உழவர்களுக்கும் ₹ 93.92 இலட்சம் தொகை (Back ended) முதலீடு உதவித்தொகையாக விநியோகிக்கப்பட்டது. ராஷ்டிரியா கிருஷி விஞ்ஞான் யோஜனா (RKVY) திட்டத்தின்கீழ் மொத்த செலவுத் தொகை ₹ 10 இலட்சத்தில் 50 விழுக்காடு உதவித் தொகையை அளித்ததன் மூலம் கூனிச்சம்பட்டு கிராமத்தில் “ஒருங்கிணைந்த இயற்கை வேளாண் முறை” செயல்படுத்தப்பட்டது.

**8.** நிலையான மேம்பாடு வேண்டி திட்டமிடுவதற்கும், ஆற்றலையும் வளஆதாரங்களை திரட்டுவதற்கும் கிராமப்புற மக்களை ஊக்குவிப்பதற்காக, வேளாண் மேம்பாட்டு மாதிரி கிராமத் தத்தெடுப்புத் திட்டம் புதுச்சேரி வட்டாரத்தில் சோரப்பட்டு கிராமத்திலும், காரைக்கால் வட்டாரத்தில் அம்பகரத்தூர், மேலவெளி, அகரமாங்குடி ஆகிய கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், அக்கிராமங்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்காக,

வேளாண் துறை மற்றும் அதைச்சார்ந்த துறைகளிலும் வேளாண் மேம்பாட்டு செயல்பாடுகள் ஒன்றிணைக்கப்படுகின்றன. மண்வள அட்டைகள், பருப்புகள் குறித்து சுருக்கமான வட்டார செயல்விளக்கங்கள் பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியும் நடத்தப்பட்டன. நகர்ப்புற பகுதிகளில் மாடித் தோட்டத்தையும், காய்கறி சாகுபடியையும் ஊக்குவிக்கும் பொருட்டு, சுமார் 900 எண்ணிக்கையிலான சாகுபடிக் கைப்பை (kit) (காய்கறி விதைகள் அடங்கிய சிறு கைப்பைகள், வளர் கைப்பைகள் முதலானவை அடங்கியது) மானிய விலையில் வழங்கப்பட்டன. பிரதம மந்திரி வேளாண் சின்சாய் யோஜனா திட்டத்தின் (PMKSY) கீழ், நீர்வள ஆதாரத் திட்டமிடுகை மற்றும் மேலாண்மைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கான மாவட்டப் பாசனத் திட்டத்தை (DIP) நாப்கான்ஸ் (NABCONS) தயார் செய்துள்ளது.

**கால்நடை பராமரிப்பு**

**9.** இந்த அரசு, கால்நடைகளின் உடல் நலத்தையும் விருத்தித் திறனையும் நிலைநிறுத்தச் செய்வதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது. கள கால்நடை நிலையங்கள் வலை-இணைப்பு வாயிலாக, கால்நடைப் பராமரிப்புச் சேவைகள் அனைத்தும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

5,96,810 எண்ணிக்கையிலான வீட்டு விலங்குகள், கோழி மற்றும் செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சை மற்றும் தடுப்பு ஊசிகள் அளித்ததுடன், காலமுறைதோறும் மருத்துவ முகாம்கள், குடற்புழு நீக்குதல் முகாம்கள் மற்றும் கருத்தரிப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. விரும்புகிற கால்நடைகளை வருங்காலத்தில் பெருக்குவதற்காக 70,595 செயற்கைக் கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. விரும்பத்தக்க உயர்ரக இன 20,724 கன்றுகள் பிறந்தன. வீட்டு விலங்குகள் வளர்ப்பில் ஆர்வத்தை உருவாக்கும் பொருட்டும், தாங்கள் அறிந்த செய்தியை மேம்படுத்தும் வகையிலும், உழவர்கள் சந்திப்பு 17 முறை நடத்தப்பட்டன. 2016-17ஆம் ஆண்டு பால் உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தும் பொருட்டு மாட்டுத் தீவனம் மற்றும் கன்று தீவனம் 75 விழுக்காடு மானிய விலையில் வழங்க இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2016-17ஆம் ஆண்டில், 48,301 மெட்ரிக் டன் பாலும், 113.56 இலட்சம் முட்டைகளும் உற்பத்திச் செய்யப்பட்டன மற்றும் இறைச்சி உற்பத்தி 14,615 மெட்ரிக் டன் ஆகும். தேசிய கால்நடை சுகாதாரம் மற்றும் நோய்க்கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் (LHDC) கால் மற்றும் வாய் நோய்களுக்கெதிராக 72,281 விலங்குகள் பாதுகாக்கப்பட்டன மற்றும் தடுப்பூசி மூலமாக பிற வெவ்வேறு நோய்களுக்கெதிராக 74,342 விலங்குகள் பாதுகாக்கப்பட்டன.

**வணிக வரிகள்**

**10.** இத்துறையானது, நிர்ணயிக்கப்பட்ட வரி வருவாய் இலக்கான ₹ 1,575 கோடிக்கெதிராக ₹ 1,576.48 கோடி வருவாயை எட்டியுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இது, கடந்த நிதியாண்டுக் கால அளவில் ஈட்டிய ₹ 1,439 கோடியை ஒப்பிடுகையில், 9.55 விழுக்காடு வளர்ச்சி ஆகும். தலைக்கவசம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுப்பணித் துறைக்கு விற்பனை செய்யப்படும் தூய்மை இந்தியா திட்டத்திற்கான கருவிகள், புதுச்சேரியில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும் இயந்திரம் பொருத்தப்பட்ட ஏர் உழும் கருவிகளுக்கு மதிப்புக்கூடுதல் வரிச்சட்டத்திலிருந்து விலக்களிப்பு மற்றும் மின்-ரிக்ஷா மற்றும் பேட்டரி மூலம் இயக்கப்படும் மகிழ்வுந்துகள், LED பல்புகள், விளக்குகள், குழல் விளக்குகள், LED கை விளக்குகள் மற்றும் சானிட்டரி நாப்கின்கள் ஆகியவற்றின் விற்பனை மீதான வரி வீதத்தில் 2 விழுக்காடு குறைப்பு குறித்து கடந்த வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடரின்போது சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியானது 2016ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதியிலிருந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனது அரசு சரக்கு மற்றும் சேவைவரியை (GST) அமல்படுத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

**குடிமைப் பொருள் வழங்கல்**

**11.** நாட்டில் பொது விநியோக அமைப்பு முறையின் முதன்மை கொள்கையானது தொடர்ச்சியாக நியாய விலையில் நியாயவிலைக் கடைகளின் மூலம் பெருமளவிலான ஏழை மக்களுக்கு உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது மட்டுமல்ல. அது, உணவுப் பாதுகாப்பு என்ற உயர்நிலையை அடைவதும், நாட்டிலிருந்து பஞ்சம் என்ற அச்சுறுத்தலை முழுமையாக ஒழிப்பதுமான முக்கியப் பங்கை செய்கிறது என்பதை இந்த மேன்மைமிகு அவைக்கு தெரிவிக்க விழைகிறேன். அனைவருக்குமான பொது விநியோக அமைப்பு முறையின்கீழ், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்கும் நோக்குடன் இந்த அரசானது இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப் பகுதிகளிலும் உணவு தானியங்களுக்கு 2013ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நேரடி பயன் மாற்றல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. மேலும், ஏழையிலும் ஏழையாக உள்ள (AAY) அட்டைதாரர்களின் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் பண மானியம் நேரடியாக செலுத்தப்படுகிறது. எங்கள் அரசின் கொள்கையான 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் பயனாளிகளுக்குத் தொடர்ந்து வழங்க உறுதிபூண்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

**12.** கல்வியானது மிகவும் சக்திவாய்ந்த கருவியாகும். அதன் மூலம் உலகை நாம் மாற்ற இயலும். அது சமூக நல்லிணக்கத்தையும், அமைதியையும் மேம்படுத்துவதற்கான முக்கியக் காரணியாகும். இந்த அரசானது அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. அது இலவச பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகளை உரிய நேரத்தில் வழங்குதல் போன்ற வெவ்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம், 1,10,434 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், தற்போதிருந்துவரும் பேருந்து வசதிக்கும் கூடுதலாக, காரைக்காலில் புதிய வழித்தடங்களில் இரண்டு பேருந்துகள் மாணவர்களின் பயனுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 6 துணை-முதல்வர் பதவிகள், 11 தலைமை ஆசிரியர் நிலை-I, மற்றும் 40 விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. ஊட்டச்சத்துமிக்க காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு திட்டத்தின்கீழ் முறையே 65,477 மாணவர்கள் மற்றும் 68,150 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**13.** கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆசிரியர்களுக்கு வெவ்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. “தகவல் திறனை மேம்படுத்துதல்” என்னும் பயிற்சி

330 (தொடக்கப்பள்ளி) தலைமையாசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. "கற்பித்தல் கற்றல் பொருட்கள்" என்னும் பயிற்சி 330 (தொடக்கப்பள்ளி) ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. "ஒலியியல் மற்றும் உச்சரிப்பு அழுத்தம்" என்னும் பயிற்சி 286 (தொடக்கப்பள்ளி) ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கும் கூடுதலாக "பள்ளி உளவியல் குறித்த பட்டறை" என்னும் பயிற்சி 60 பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு INSPA (RMSA)வால் அளிக்கப்பட்டுள்ளது. தலா 50 பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குப் புத்துணர்வு பயிற்சி, கணக்கு மற்றும் அறிவியல் (SSA) பாடங்களில் அளிக்கப்பட்டுள்ளது. புதியதாக பணியமர்த்தப்பட்ட 400 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு புகுமுக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 250 பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு உள்ளடக்க செறிவூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**14.** அரசுப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை மேம்படுத்துவதற்காக 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பாடவாரியாக செயலாக்கப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. திறன்மிக்க கற்பித்தலுக்காக தொடக்கப்பள்ளி ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட வேண்டிய வெவ்வேறு கற்றல், கற்பித்தல் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை உருவாக்கும்

நோக்கத்துடன் இலாசுப்பேட்டை மாவட்டக்கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தில் (DIET) “கற்றல் கற்பித்தல் பொருட்கள்” கண்காட்சி நடத்தப்பட்டது. தொடக்கப்பள்ளி மற்றும் மேல் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில மொழிப்பாடம் கற்பிக்கிற 15 பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை அடையாளம் கண்டு அவர்களை ஆங்கில மொழி பயிற்சி குறித்த 30 நாள் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்வதற்காக பெங்களூரிலுள்ள, தென்னிந்திய வட்டார ஆங்கில கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**15.** மாநில பள்ளி விளையாட்டுப் போட்டி, மண்டல விளையாட்டுப் போட்டிகள், வட்டார அளவிலான மற்றும் மாநில அளவிலான 63ஆம் தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சி தேர்வு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், மாநில பள்ளி விளையாட்டுப் போட்டி, குழு விளையாட்டுத் திட்டங்கள் ஆகியவை நடத்தப்பட்டன. கேலோ இந்தியா மாநில அளவிலான கீழ்நிலைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

**உயர் மற்றும் தொழில்நுட்பக்கல்வி**

**16.** உயர்கல்வியானது, அதிக திறனையும் எதிர்காலத்தை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டுள்ள ஒரு துறையாக தொடர்ந்து இருந்துவருகிறது. எனவே, உயர்கல்விக்கு வசதிகள்

அளிப்பதை உறுதிசெய்து, இளைஞர்கள் அவர்களின் திறன்களுக்கு பொருத்தமாக உள்ள பாதையை தேர்ந்தெடுத்து அதை நோக்கி பயணிப்பதற்கு ஊக்கப்படுத்துவதே நமது அரசின் நோக்கமாகும்.

**17.** நூற்றுக்கும் அதிகமான அரசு மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் புதுச்சேரியை தென்மாநிலங்களில் ஓர் அறிவு மையமாக திகழச்செய்வதற்கான நிலையை ஏற்படுத்தியுள்ளன. தற்போது, மாநில பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு நிதி அளிப்பதன் மூலம் உயர்கல்வியில் அணுகுதல், சமவாய்ப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய ஆதரவுத் திட்டமான "ராஷ்ட்ரிய உச்சாதார் சிக்ஷா அபியான் (RUSA)" திட்டத்தை செயல்படுத்துவதற்காக புதுச்சேரி மாநில உயர்கல்வி குழுவை அமைத்ததன் மூலம் வரும் காலங்களில் உயர்கல்வித்துறையில் நாம் மிகப்பெரும் பங்கை வகிக்கமுடியும். புதுச்சேரி மாநிலத்தில் உள்ள மாணவ-மாணவியர்களுக்கு உயர்கல்வி தேவைகளை பூர்த்திசெய்யும் பொருட்டும் வேலைவாய்ப்பை பெருக்கவும் தனியார் பல்கலைக் கழகங்கள் அமைப்பதை ஊக்குவிக்க பூர்வாங்க பணிகளை இந்த அரசு செய்துவருகிறது.

**18.** பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் 786 மருத்துவ மாணவர்களுக்கும், 4,752 பொறியியல் மாணவர்களுக்கும், 535 செவிலியர் மாணவர்களுக்கும் அவர்கள்

தொழிற்கல்வியை தொடர்ந்து படிப்பதற்கு ₹ 30 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கை அளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கையை கருதுகை செய்து அதன் மீது நடவடிக்கை எடுத்து மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடப்பிரிவுகளை படிப்பதற்காக பட்ட மேற்படிப்பு பாட வகுப்பில் 43 சேர்க்கை இடங்கள் உள்ளடங்களாக 279 சேர்க்கை இடங்களை அளிக்கும் பொருட்டு வெவ்வேறு அரசு மற்றும் சங்கங்களால் நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இந்தக் கல்வியாண்டிலிருந்து பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பாடப்பிரிவுகளில் சேர்க்கை இடங்களை அதிகரித்துள்ளது.

**மின்சாரம்**

**19.** தடையற்ற மின்வழங்கல் இவ்வாட்சிப்பரப்பின் தனி அடையாளமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்திய அரசின் மின்சார அமைச்சகமானது, இவ்வாட்சிப்பரப்புக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4.24 MW மின்சாரத்திற்கும் கூடுதலாக அண்மையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்தின் புதிய அனல்மின் திட்டத்திலிருந்து

53 MW மின்சக்தியை ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். மறுகட்டமைக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட்ட மின்சக்தி மேம்பாடு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ₹ 43.41 இலட்சம் செலவில் 16 மின்வழங்கல் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. காரைக்கால் நகரப்பகுதிக்கு போதிய மற்றும் நம்பகமான மின்வழங்கலை அளிக்கும் பொருட்டு ₹ 1.70 கோடி செலவில் RMU பேனல்களுடன் 2.8 கிலோ மீட்டர் வழித்தட நீளத்திற்குப் புதிய 11 KV Town-3 மின்னூட்டி நிறுவப்பட்டுள்ளது.

**20.** புதுச்சேரி மின்துறை மின்தொகுப்புடன் அண்மையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள, புதுச்சேரி, பிரெஞ்சு தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ள 45 KW மேல்கூரை சூரிய மின்சக்தி எந்திரத்தொகுதி உள்ளடங்களாக சூரிய மின்சக்தி எந்திரத் தொகுதியின் நிறுவப்பட்ட திறனானது இவ்வாட்சிப்பரப்பில் 230.50 KWஆக அதிகரித்துள்ளது.

**21.** வழக்கமான மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் 11.14 கிலோ மீட்டர் உயர்மின் அழுத்த கம்பிகள் மற்றும் 34.51 கிலோ மீட்டர் குறைந்த மின் அழுத்த கம்பிகளுடன் வெவ்வேறு திறன்கொண்ட 52 புதிய மின்வழங்கல் மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 21 மின்வழங்கல் மின்மாற்றிகள் உயர்திறன்

கொண்டவைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன மற்றும் 1.859 கிலோ மீட்டர் உயர்மின் அழுத்த கம்பிகள், 18.57 கிலோ மீட்டர் குறைந்த மின் அழுத்த கம்பிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கும் கூடுதலாக, 17 உயர் மின் அழுத்த தொழிற்சாலை மின் இணைப்புகள், 46 குறைந்த மின் அழுத்த தொழிற்சாலை மின் இணைப்புகள், 10,813 வீட்டு மின் இணைப்புகள், 1,513 வணிக மின் இணைப்புகள், 31 வேளாண் மின் இணைப்புகள், 123 தெருவிளக்கு மின் இணைப்புகள் ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன. மேலும், 7.132 கிலோ மீட்டர் உயர் மின் அழுத்த புதைவட மின்கம்பிகள்; 0.938 கிலோ மீட்டர் குறைந்த அழுத்த மின்கம்பிகள்; 123 குறைந்த மின் அழுத்த மேல்நிலை இணைப்புகள் மற்றும் 12 மேல்நிலை தெருவிளக்குகள் 2016-17ஆம் ஆண்டின்போது புதைவட மின்கம்பி அமைப்பு முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**22.** மின்சக்தி வழங்கல் முறையின் திடநிலையை மேம்படுத்தும் பொருட்டு பழைய புதைவட கம்பிகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. எண்ணெய் நிரப்பப்பட்ட பழைய வளைய முதன்மை மின்பிரிவுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மின்வழங்கல் தரவு மேலாண்மை அமைப்பு முறையுடன் (SCADA) இணக்கமான புதிய தொழில்நுட்பம் கொண்ட வளைய முதன்மை மின்பிரிவுகளைக் கொண்டு மாற்றம் செய்யப்படுகின்றன.

முத்தியால்பேட்டை பகுதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு வெங்கட்டா நகரில் 110/22-11 KV மின்பிரிவில் புதிய 110/22 KV மின்மாற்றி நிறுவப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. முத்தியால்பேட்டைக்கு தற்போது புதிய 22 KV மின்னூட்டி மூலம் மின்சாரம் அளிக்கப்படுகிறது. அது அப்பகுதிக்குத் தடையற்ற மின்வழங்கலை உறுதி செய்யும்.

**தொழில்துறை**

**23.** இந்த அரசு அண்மையில் "2016ஆம் ஆண்டு புதிய தொழிற்கொள்கையை" அறிவித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புதிய தொழிற்கொள்கையானது தொழில் செய்வதை எளிமையாக்கும். மேலும் அது, தொழிற்சாலைகளுக்கான தடையின்மைச் சான்றிதழ், தொழிற்சாலைக்கான நிலவங்கி வசதி மற்றும் தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாகப் பெறுவதற்கு வழிவகுக்கும். தொழில் துறையின் சிக்கல்களைப் போக்கும் பொருட்டு, சரக்குகள் மற்றும் சேவை வரியால் (GST) ஏற்படும் பாதிப்பைச் சரிக்கட்டுவதற்காகப் புதிய தொழிற்கொள்கையானது, இவ்வாட்சிப்பரப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், மேலும், பல

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என நம்புகிறேன். புதுச்சேரியில் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதே அரசின் நோக்கமாகும்.

**24.** 2016-17ஆம் ஆண்டின்போது, தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்காக 20 தொழிற்சாலைகளுக்கு ₹ 2.10 கோடி உதவி அளிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இன இளைஞர்கள் உள்ளிட்ட வேலையில்லா இளைஞர்களின் நலனுக்காக, கைவினைஞர்கள் / தென்னை நார் கைவினைஞர்கள், சிறு குடிசைத்தொழில் மற்றும் குறுந்தொழில் செய்பவர்களுக்கு தொழிற்சாலைப்பயிற்சி, தொழிற்பயிற்சி, மேம்பட்ட / உயர்திறன்மிக்க பயிற்சி, கைவினைப்பயிற்சிகள் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பயிற்சித் திட்டங்களின் மூலம் 328 அட்டவணை இனத்தவர்கள் உட்பட 1,247 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**25.** வேலைவாய்ப்பில்லாதவர்களை சுய தொழில் நிறுவனங்கள் தொடங்க ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு வங்கிகள் மூலம் நிதி உதவியும், மானியமும் வழங்கப்பட்டது. இதன்மூலம் 242 நபர்கள் ₹ 2.02 கோடி வங்கிக்கடன் பெற்று அதன்மூலம் ₹ 75.08 இலட்சம் மானியம் பெற்றுள்ளனர். “கைவினை மேம்பாடு மற்றும் தென்னை நார் மேம்பாடு”

திட்டத்தின்கீழ் 515 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக ₹ 22 இலட்சம் தொகை செலவிடப்பட்டுள்ளது. "பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின்கீழ்" 24 தொழில் முனைவோர்களுக்கு வங்கிகளால் அளிக்கப்பட்ட கடனுக்காக ₹ 34.97 இலட்சம் அளவுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**தகவல் மற்றும் விளம்பரம்**

**26.** ஊடகப் பணியாளர்களின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் இந்த அரசானது அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை ₹ 6,000லிருந்து ₹ 7,500 ஆக உயர்த்தியுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**27.** பொதுமக்களுக்கு வீட்டின் அருகாமையிலேயே வெவ்வேறு சேவைகளை வழங்கும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பு முழுவதிலும் பொதுச்சேவை மையங்கள் (CSC) அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 82 பொதுச்சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. 114 புதிய இடங்களில் பொதுச்சேவை மையங்கள் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை அளித்தல், பட்டா மற்றும் செட்டில்மெண்ட் நகல் வழங்குதல், FMB நகல் வழங்குதல் போன்ற சேவைகள் தற்போது பொதுச்சேவை மையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் மற்றும்

கிராமத்தில் உள்ள தொழில் முனைவோர் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு பொதுச்சேவை மையங்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் பயன்பாட்டுக்காக மின் – மாவட்டத் திட்டத்தின்கீழ் 11 தொடர்புத் துறையின் 72 சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**28.** வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறையில் 4,000 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிற்சாலைச் சான்றிதழ் பாடவகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது. இரண்டு மிகப்பெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 7 பன்னாட்டு நிறுவனங்கள் (MNCs) உள்ளிட்ட 34 நிறுவனங்களால் 1,850 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். தொழில் திறன்களை வெளிப்படுத்தும் பொருட்டும், கற்பிக்கும் பொருட்டும் முதன்முறையாக புதுச்சேரி இளைஞர்கள் டிஜிட்டல் உச்சி மாநாடு நடத்தப்பட்டு புதுச்சேரியை சார்ந்த 4 மாணவர்கள் கல்விப் பயணமாக சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். நாட்டில் குறைந்த ரொக்கப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பில் “டிஜிதன் மேளா” (Digidhan Mela) நடத்தப்பட்டது. இதனை சுமார் 10,000 நபர்கள் பார்வையிட்டுள்ளனர். அதில், பொதுமக்கள், வணிகர்கள், அரசுத்

துறைகள் உள்ளிட்ட அனைத்துப் தரப்பினர்களுக்கும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டது. கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட 13 வங்கிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு துறைகள் இந்த மேளாவில் பங்கேற்றன. ஜிப்மர் (JIPMER), புதுச்சேரி பொறியியல் கல்லூரி, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டுக்குழு ஆகிய 3 பெரும் அமைப்புகள் ரொக்கப் பரிமாற்றம் அற்ற நிறுவனங்களாக ஆகியுள்ளன.

**தொழிலாளர் நலம்**

**29.** தொழிலாளர் நலன் ஒரு சமூக உரிமை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வர். இந்த அரசு, தொழிலாளர் நலனுக்கு முன்னுரிமை அளித்துவருகிறது. மேலும், தொழிலாளர் நலன்களை பாதுகாப்பதில் அவ்வப்போது சட்டங்களையும் அறிமுகப்படுத்தி வருகிறது. புதுச்சேரி கட்டடம் மற்றும் பிற கட்டுமானப் பணியாளர்கள் வாரியத்தில் பதிவு செய்துள்ள 37,523 பணியாளர்களுக்கு நலத்திட்டங்களை மேற்கொள்வதற்காக ₹ 8.15 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, புதுச்சேரியின் நான்கு வட்டாரப் பகுதிகளிலும் புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலச் சங்கத்தில் பதிவு செய்துள்ள 25,020 உறுப்பினர்களுக்கு நலப் பயன்களை அளிப்பதற்காக ₹ 2.60 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**30.** சிக்கலான நடைமுறையைத் தவிர்க்கும் பொருட்டும் வணிக சமூகத்தினரின் விலைமதிப்பற்ற நேரத்தைச் சேமிக்கும் பொருட்டும் 1964ஆம் ஆண்டு புதுச்சேரி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டத்திற்கான மென்பொருளை உருவாக்கும் பணியை நிறைவு செய்து, அதன்மூலம் இச்சட்டத்தின்கீழான பதிவை / புதுப்பிப்பு ஆகியவற்றை எளிதாக்கும் பொருட்டு, புதுச்சேரி தகவல் மையம் மூலம் "தொழில் செய்வதை எளிதாக்குதல்" என்னும் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட பதிவு மையத்தில், மாணவர்கள் கூட்டமாக ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டும், மாணவ சமுதாயத்தினரின் சிரமங்களைக் குறைக்கும் பொருட்டும், இந்த அரசானது, மாணவர்கள் தங்களது 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புக் கல்வித்தகுதியை வேலைவாய்ப்பு மையத்தின் இணையதளம் மூலம் பதிவு செய்துகொள்வதற்குத் தங்களுடைய பள்ளிகளிலேயே சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம் 10ஆம் வகுப்பு பயின்ற 11,869 மாணவர்களும், 12ஆம் வகுப்பு பயின்ற 8,652 மாணவர்களும் பதிவு செய்துள்ளனர்.

**31.** இத்துறை மூலம் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு அதில் 82 நபர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் 45 நபர்கள் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டனர். தேசிய வேலைவாய்ப்புச் சேவை இணையப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டு, அதில்

520 வேலை தேடுவோர், வெவ்வேறு வேலைவாய்ப்புகளுக்காகப் பதிவு செய்துள்ளனர். இது, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தேசிய அளவில் போட்டியிட வாய்ப்பளிக்கும்.

**உள்ளாட்சி**

**32.** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ள, மிகப்பெரிய துப்புரவுத் திட்டமாகிய "தூய்மை இந்தியா" திட்டமானது இவ்வாட்சிப்பரப்பில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிக்க உறுப்பினர்கள் மிகவும் நன்கு அறிவார்கள். மேலும், தனிப்பட்ட தொகுப்பு மற்றும் சமுதாயக் கழிவறைகள் கட்டுவதன் வாயிலாகத் திறந்தவெளியில் மலம் கழிப்பதைக் குறைப்பதற்கும் அறவே நீக்குவதற்குமான இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களை பூர்த்தி செய்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் கூறுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் காணப்படுகிற தூய்மையான மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழலே, இத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதில் அரசின் திறம்பட்ட செயல்பாட்டை மெய்ப்பிக்கிறது.

**33.** சுகாதாரத்தின் மீது மேம்பட்ட கவனம் செலுத்தப்படுவதன் காரணமாக தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டுக்காகவும், 2,207 வீடுகளில் தனிக் கழிப்பிடங்கள்

கட்டுவதற்காகவும் ₹ 3.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. நகரப்பகுதிகளில் 38 வார்டுகள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத வார்டுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாகி வட்டாரப் பகுதி ஏற்கனவே திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**34.** வீட்டுக்கு வீடு தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை திரட்டும் பணிகள் காரைக்கால் மற்றும் மாகி வட்டாரப் பகுதிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. காரைக்கால் வட்டாரத்தில் மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. மாகி நகராட்சியில் வீட்டிலேயே இயற்கை உரம் தயாரிக்கும் பணி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**காவல்**

**35.** காவல் பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், காவல் படையைப் பலப்படுத்துவதற்காகவும் காவலர் பணி முதல் காவல் ஆய்வாளர் பணி வரையில் வெவ்வேறு பதவிகளில் பணியாற்றும் 205 காவல் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படையில் 35 நபர்கள் காவலர்களாகவும், 30 ஊர்க்காவல்படை வீரர்கள் காவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**36.** இவ்வாட்சிப்பரப்பில், அனைத்துக் காவல் நிலையங்களையும் மாநிலக் குற்றப் பதிவேடுகள் பிரிவு (SCRB) மற்றும் தேசிய குற்றப் பதிவேடுகள் பிரிவுடன் (NCRB) இணைக்கும் குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு இணைய அமைப்பு முறையானது (CCTNS) ₹ 9.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கான குடிமக்களின் காவல் இணையதளம் முழுமையாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. புதுச்சேரி காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி மேற்கொள்ளும் காவல் பணியாளர்களுக்காக முழுமையான வசதிகள் நிறைந்த உட்புற உடற்பயிற்சி மையம் (உடற்பயிற்சிக் கூடம்) ₹ 1.90 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. புதுச்சேரி, கோரிமேட்டில் மூன்று மாடி அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பொதுப்பணிகள்**

**37.** எனது அரசானது பாதுகாப்புடைய சுத்தமான குடிநீர் வழங்குவதிலும், குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் உறுதியாக உள்ளது. சாலைகளை அகலப்படுத்துதல், மேம்படுத்துதல், தற்போதுள்ள சாலைகளை புதுப்பித்தல் போன்ற வெவ்வேறு வகை 15 சாலைப்பணிகள்

₹ 13.96 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியில் ₹ 1.58 கோடி செலவில் மாணவர் மையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**38.** இதற்கும் கூடுதலாக, மாகி வட்டாரப் பகுதி, பள்ளூரில், பள்ளூர் துணை மின்நிலையத்திலிருந்து ஆரவிளாத் பாலம் வரை கால்வாய் கரைகள் பாதுகாப்புப்பணி ₹ 1.90 கோடி செலவிலும், பொதுப்பணித்துறை சாலைகளை மேம்படுத்தும் பணிகள் உள்ளடங்களாக மிகவும் சேதமடைந்திருந்த நகராட்சிச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் ₹ 13.07 கோடி செலவிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட கூட்டத்தொடரின்போது அறிவிக்கப்பட்ட வெவ்வேறு கட்டடப்பணிகளை செய்து முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதில், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள வடிகால்களைத் தூர்வாருதல், காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் கால்வாய்களை தூர்வாருதல் ஆகிய பணிகள் ₹ 9.44 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. மேலும், இந்த அரசானது, குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம், சாலைகள் மற்றும் பாலங்கள், பொதுப்பணிகள், வீட்டுவசதி, பாசனம் மற்றும் வெள்ளக்கட்டுப்பாடு போன்ற

துறைகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு தொடர்புடைய பல கட்டடப்பணிகளை செய்து வருகிறது. உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நிதியாதாரம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதால் சில பெரிய திட்டங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து ₹ 133.68 கோடி கடன் (Negotiated Loan) பெற்று நிறைவேற்றப்பட்டன. 2016-17ஆம் ஆண்டின்போது தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காகவும், பராமரிப்பதற்காகவும் மத்திய சாலை நிதியிலிருந்து (CRF) ₹ 9.71 கோடி செலவிடப்பட்டது. மேலும், நீர் ஆதாரத்தை பெருக்குவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு மேற்கொள்ளும். ஏரி குளங்களை தூர்வாரும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஊரக மேம்பாடு**

**39.** கிராமப்புற குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு 474 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் 39 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 435 பணிகள் நடைபெற்று வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின்கீழ் (MGNREGA) 31,017 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்காக ₹ 10.42 கோடி செலவிடப்பட்டுள்ளது. 201 புதிய சுயஉதவிக்

குழுக்கள் (SHGs), 160 குடியிருப்பு நிலை கூட்டமைப்பு (HLF), 44 பஞ்சாயத்து நிலையிலான கூட்டமைப்பு (PLF) உருவாக்கப்பட்டுள்ளன. 24 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி அளிக்கப்பட்டுள்ளது. “தூய்மை இந்தியா” திட்டத்தின் (Gramin) கீழ் ₹ 4.14 கோடி செலவில் 1,862 பயனாளிகளுக்கு கழிப்பிடங்கள் கட்ட நிதி உதவி அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**சமூக நலம்**

**40.** அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்படும் என உலக மாற்றுத்திறனாளிகள் நாளன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அவையில் நான் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். செயற்கை உபகரணங்கள், மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள், மாணவர்களுக்கான படிப்பு உதவித்தொகை, போக்குவரத்து படிகள், மாற்றுத்திறனாளிகளின் ஈமச் சடங்கிற்காக அவர்களின் நெருங்கிய உறவினருக்கு ₹ 5,000 வீதத்தில் ஈமச் சடங்கு செலவுத் தொகை, திருமண நிதி உதவி வழங்கல் போன்ற வெவ்வேறு நலப்பயன்கள் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என

தெரிவிக்க விழைகிறேன். பள்ளி இறுதித்தேர்வில் முதல் மூன்று மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவர்களுக்கு பாராட்டு பதக்கம் வழங்கப்படுகிறது. சுற்றுலாத் திட்டத்தின்கீழ் 285 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

**நில அளவை**

**41.** வளர்ந்து வரும் மின்னணு சகாப்தத்தில் இந்த அரசானது, நிலம் தொடர்பான விவரங்களைக் கணினி மயமாக்கியுள்ளது. அதாவது, கள நிலப்படங்கள் மற்றும் கணினி மயமாக்கப்பட்ட நிலம் தொடர்பான விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இது பொதுமக்களுக்கு, துறையை அணுகாமலேயே அருகிலுள்ள பொதுச்சேவை மையத்திலிருந்து (CSC) கள அளவைப் புத்தக (FMB) நகல்களை பெறுவதற்கு வழிவகுக்கும். தற்போது இந்த வசதி புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரப் பகுதிகளுக்கு மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. வீடுகட்டும் திட்டத்தின்கீழ் நிலமில்லா தொழிலாளர்களுக்கு 45 இலவச மனைப்பட்டாக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து**

**42.** நாட்டின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து அமைப்புமுறை அவசியம் என்பதையும், அது தேசிய மற்றும் உலக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வர். இந்த அரசால் அளிக்கப்பட்டுள்ள முக்கியமான வசதிகளுள் புதிய சிற்றுந்து (Mini Buses) வசதியும் ஒன்றாகும். சிற்றுந்துகள் புறநகர் பகுதிகளிலிருக்கும் மக்களின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. பாகூர் வட்டார மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, காட்டுக்குப்பத்தில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்துப் பிரிவு அலுவலகமானது ₹ 30.40 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**43.** சாலைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் பொருட்டு, இந்த அரசானது தலைக்கவசத்தை பொதுமக்கள் அணியவேண்டும் என்பதை கட்டாயமாக்கியும், கல்வி நிலையங்களில் வாரந்தோறும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தியும் வருகிறது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**44.** இந்த அரசானது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்தின் மீது அதிக கவனம் செலுத்துகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபு இன மாணவர்களின் நலனுக்காக, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விடுதி கட்டடங்களை கட்டியுள்ளது. இதன் மூலம் 230 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**45.** இந்த அரசானது, சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்காக நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திவரும். 933 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிப்பது மட்டுமின்றி இந்த அரசானது பள்ளி இறுதித்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுடன் கூடிய தியாகி வ. சுப்பையா விருது வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**46.** இந்த அரசால் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் உரிய அக்கறையையும், பாதுகாப்பையும் அளித்து வருகிறது என்பதை

மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் மூலம் இவ்வாட்சிப்பரப்பில் சமூக ஒழுக்கம் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

**47.** 2016-17ஆம் ஆண்டின்போது, ஏழை மணப்பெண்ணுக்கு திருமணம் செய்வதற்கான நிதி உதவி, கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித்தொகை, விதவை மகள் திருமண உதவித்தொகை மற்றும் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெற்றோர்களின் குடும்பத்திற்கு உதவித்தொகை ஆகிய நிதி உதவி அளிப்பதற்காக ₹ 94.36 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. முதியோர் மற்றும் விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர், திருமணமாகாத முதிர்கன்னிகள், திருநங்கைகள் ஆகிய பிரிவைச் சேர்ந்த 1,44,847 நபர்கள் இந்தச் சமூக பாதுகாப்புப் பயனை பெற்று வருகின்றனர். இந்தத் திட்டத்தின்கீழ் 2016-17ஆம் ஆண்டின்போது ₹ 331.68 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**48.** 855 அங்கன்வாடி மையங்களின் மூலமாக ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவை திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் கூடுதல் ஊட்டச்சத்துணவு வழங்கப்பட்டு

வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 26,242 குழந்தைகள் மற்றும் 5,819 தாய்மார்களுக்கு கூடுதல் ஊட்டச்சத்துணவு வழங்கப்பட்டது. இதற்காக 2016-17ஆம் ஆண்டின்போது ₹ 16.61 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**49.** மக்களின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு எனது அரசு உறுதி பூண்டுள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் அனைத்து வட்டாரப் பகுதிகளிலும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும், மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு அதிக கவனம் செலுத்தப்படும். வேளாண்மை மற்றும் தொழில் துறை ஆகிய இரண்டுக்கும் உரிய வகையில் ஆதரவளித்து சமச்சீரான முறையில் முக்கியத்துவம் அளிக்கப்படும். நடைபெற்று வரும் நலத்திட்டங்களை பாதிக்காத வகையில் முதலீட்டுச் செலவினங்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும். மக்கள் பாதுகாப்பான, தூய்மையான, சுகாதாரமான மற்றும் அமைதியான சூழலில் வாழ்வதற்கான நல்ல நிலையை அடைவதற்காக அனைத்து வகையிலும் வளர்ச்சி பெறுவதற்கான உயர்ந்த குறிக்கோளை அடைவதே எனது அரசின் விருப்பமாகும்.

**50.** இந்த மேன்மைமிகு அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஒவ்வொருவரின் கருத்துகளுக்கும் மிகுந்த மரியாதையளித்து ஒத்துழைப்பு நல்கும் முறையில் இவ்வாட்சிப்பரப்பின் மேம்பாடு தொடர்புடைய பிரச்சனைகள் மீது ஆக்கப்பூர்வமான விவாதங்களை வைப்பீர்கள் என நம்புகிறேன். தங்கள் கலந்தாய்வு விவாதங்கள் வெற்றிபெற நான் தங்களை வாழ்த்துகிறேன்.

*நன்றி !*

*ஜெய்ஹிந்த் !!*

சுத்தமான பாரதம்

சுத்தத்தை நோக்கி மேலும் ஓர் அடி

அச்சிட்டோர் : **அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 9**